IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 112/2017**

| **DEPOSITION OF WITNESS** | **DW.3** |
|---|---|

| NAME | சரவணன் | TALUK | வாலாஜா |
|---|---|---|---|
| FATHER NAME | தங்கவேலு | RELIGION | இந்து |
| AGE | 51 | CASTE | |
| VILLAGE | வாலாஜாபாத் | OCCUPATION | குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளர் |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 08.03.2024

முதல் விசாரணை

1.நீதிமன்றத்தில் இருந்து குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அவருக்கு பதிலாக சாட்சியம் அளிக்க எனக்கு அனுமதி கடிதம் அளிக்கப்பட்டு நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த அனுமதி கடிதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அவை நீ.ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2.அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணமான 318/1965 பாக பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் மற்றும் 3470/1966 எண் கொண்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலின் மேலும் 4191/1971 என்ற எண் கொண்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். மேலும் குடியாத்தம் நீதிமன்றத்தில் இருந்து இ.பி.302/1987 இன் வழக்கு மூலமான எல்.எண்.30/1987 என்று பதிவாகியுள்ள வில்லங்கம் மற்றும் இன்றைய தேதி வரை உள்ள வில்லங்கத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அவைகள் முறையே Ex.X.1 முதல் ExX.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3.ஆவண எண்.318/1965 பாக பிரிவினை பத்திரம் படி காசிநாத கவுண்டர், சின்னதுரை கவுண்டர், சுப்பிரமணியம், கோவிந்தசாமி, சீனிவாசன், காளியம்மாள் ஆகியோருக்கு இடையே பாக பிரிவினை ஏற்பட்டதாக உள்ளது.

4.மேற்கண்ட ஆவணத்தில் சீனிவாசனுக்கு "E" அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது.

5."E" அட்டவணை சொத்தின் விவரம் மேல்முட்டுகூர் கிராமம் சர்வே எண்.12 எ அதன் விஸ்தீரணம் 2 ஏக்கர் 47 செண்ட். மேல்முட்டுகூர் கிராமம் சர்வே எண்.48/1, அதன் விஸ்தீரணம் 0.23 செண்ட். சர்வே எண்.49/2 அதன் விஸ்தீரணம் 0.47 செண்ட்.

6. ஆவண எண்.3470/1966 ஆனது குப்புசாமி கவுண்டர் மனைவி பச்சையம்மாள் அவர்கள் துரைசாமி மகன் சீனிவாசனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட எதிரிடை மறு விற்பனை ஒப்பந்தம். மேல்முட்டுகூர் கிராமம் சர்வே எண்.48/1 அதன் விஸ்தீரணம் 3 ஏக்கர் 10 செண்ட் மற்றும் சர்வே எண்.49/2 அதன் விஸ்தீரணம் 2 ஏக்கர் 08 செண்ட்.

7.ஆவண எண்.4191/1971 ஆனது குப்புசாமி கவுண்டர் பாரியாள் பச்சையம்மாள் அவர்கள் துரைசாமி கவுண்டர் குமாரர் சீனிவாச கவுண்டருக்கு கிரையம் எழுதிக் கொடுக்கப்பட்டது, மேல்முட்டுகூர் கிராமம் அதன் சர்வே எண்.48/1 அதன் விஸ்தீரணம் 0.22 செண்ட். சர்வே எண்.49/2 அதன் விஸ்தீரணம் 0.47 செண்ட்.

8.இ.பி.302/1987 ஆவணம் ஆனது பேங்க் ஆப் தஞ்சாஊர் எதிராக துரைசாமி மகன் சீனிவாசன் பெயரில் போடப்பட்ட வழக்கின் இ.பி.302/1987 ன் அச்சாட்மென்ட் உத்திரவு படி மேல்முட்டுகூர் கிராமம் சர்வே எண்.12 எ அதன் விஸ்தீரணம் 2 ஏக்கர் 47 செண்ட் இல் 2 ஏக்கர் 10 செண்ட் அச்சாட்மென்ட் செய்துள்ளனர்.

<u>வாதி தரப்பு குற்றவிசாரணை</u>

1. Ex.X.1 முதல் Ex.X.3 வரையிலான ஆவணங்கள் பதிவு செய்த போது அடையாள அட்டை வாங்கும் முறை இல்லை என்றால் சரிதான்.

2.சீனிவாசனுக்கு வேறு பெயர் உள்ளது என்பதை அடையாள அட்டையை பார்த்ததால் தான் சொல்ல முடியும் என்றால் சரிதான்.

3.மேற்கண்ட கால கட்டத்தில் அவர்கள் கொடுத்த பெயரை வைத்து தான் பதிவு செய்துள்ளார்கள் என்றாலும் அடையாள அட்டையை சரிப்பார்க்காமல் பத்திரம் பதிவு செய்வார்க்ள என்றால் அதைப்பற்றிள னக்கு தெரியாது.

4. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் எங்கள்

அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் துரைசாமி கவுண்டர் குமாரர் சீனன் என்பவர் ராஜாகவுண்டர் அவர்களின் குமாரர் ஆர்.முனிரத்தினம் அவர்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய பத்திரம். அதன் சொத்து விவரம் மேல்முட்டுகூர் கிராமம் நஞ்சை சர்வே எண்.12 எ/1 அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 92 1/2 செண்ட். சர்வே எண்.48/1 எ அதன் விஸ்தீரணம் 0.23 1/2 செண்ட். சர்வே எண்.49/2 எ அதன் விஸ்தீரணம் 0.39 1/2 செண்ட்.

5.நான் 31.07.2009 லிருந்து குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணி செய்து வருகிறேன்.

6.2008 ல் சார்பதிகார் அலுவலகத்தில் பதிவு செய்யும் நடைமுறை பற்றி எனக்கு தெரியாது. 2008 காலகட்டத்தில் ஆவணம் பதிவு செய்யவேண்டுமானால் மூல ஆவணம் இருந்தால் தான் பதிவு செய்வார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

7.Ex.X.5 ஆவணத்தில் வா.சா.ஆ.2 ன் பதிவு ஏன் வரவில்லை என்றால் இன்டக்ஸ் பார்த்து தான் சொல்ல முடியும். இன்டக்ஸ் பார்த்து அதில் எத்தனை பதிவுகள் உள்ளது என்பதை நான் சாட்சியம் அளிக்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

8.இன்டக்ஸ் எடுத்து வந்து சாட்சியம் அளிக்க எனக்கு ஒரு வாரம் கால அவகாசம் வேண்டும். எனவே குறுக்கு விசாணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.